

# 1

# எழில் கொஞ்சும் இயற்கை

கண்ணன் : ராகவா! உனக்கு ஒரு செய்தி தெரியுமா? காலம் காலமாக ஊர் நுழைவாயி ல் நமக்கு நிழல் தந்து, குளிர்ந்த காற்றை வீசி இன்முகத்தோடு நம்மை வரவேற்றுக்கொண்டிருந்த ஆலமரத்தை வெட்டப் போகிறார்களாம்.

ராகவன் : என்ன சொல்கிறாய்? நாம் ஓடியாடி, விளையாடி, பாடம் படித்து, ஒய்வு எடுக்க நிழல் தந்த மரத்தையா வெட்டப் போகிறார்கள்?

கண்ணன் : ஆமாம்! தொழிற்சாலைகள் கட்டுவதற்காக இது போன்ற மரங்கள் நிறைந்த காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் மழை குறைந்து வேளாண்மை ந வடைகிறது. நாம் வாழும் சூழல் மாசுபடுகிறது.



ராகவன் : இதைத் தடுக்க என்ன செய்யலாம்?

கண்ணன் : “இயற்கையைக் காப்போம்” என்ற இயக்கத்தைத் தொடங்குவோம். எங்கெல்லாம் மரங்கள், காடுகள் அழிக்கப் படுகின்றனவோ அங்கெல்லாம் அதை எதிர்த்துப் போராடுவோம். மக்கள் மனதில் ஒரு விழிப்புணர்வை உருவாக்குவோம்.



- இயற்கைக்குக் கேடுவரும் வகையில் மனிதன் என்னென்ன செய்கிறான்?
- இயற்கையை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்? கருத்துகளைக் கூறுங்கள்.

# குறிஞ்சிநிலக் காட்சி

பனிமூட்டம் தேங்கி நிற்கும்
மலையின் கூட்டம்
பனிமலையில் மழை வீழ்ந்ததால்
நீரின் ஓட்டம்
கனியொத்த மலைப்பெண்கள்
ஆடும் ஆட்டம்
கவினழகாய்க் காட்சிதரும்
கலையை ஊட்டும்

மலைச்சரிவில் தேயிலைகள்
வளர்ச்சி காட்டும்
மான்குட்டி அங்குமிங்கும்
நடையைக் கூட்டும்
நிலப்பிரிவில் மலர்க்கூட்டம்
மணத்தை ஈட்டும்
நீரோடை இடையிடையே
நீரை ஊற்றும்





பூக்களிலே தேன்வண்டு
கூவிப் பாடும்
பூஞ்சிட்டு தேனருந்தப்
புகுந்து ஓடும்

மலையருவி பெரியாறாய்
மாறும்போது
மனமருவி மகிழ்ச்சியுடன்
தாளம் போடும்
கலை தவழும் மலையாள
மொழியின் ஊடே
எழில் தவழும் தமிழர்மனம்
இசையாய் மாறும்.

**– கவிஞர் செம்பை சேவியர்**



## செயல்பாடுகள்

- ஓசைநயம் ஒருங்கிணைந்த கவிதை வரிகளைக் கண்டுபிடியுங்கள்.
- இக்கவிதையில் உனது மனதைக் கவர்ந்த வரிகள் எவை? காரணம் யாது?
- மலையருவியைக் கவிஞர் வருணித்து எழுதியுள்ளது போன்று ஓடும் ஆற்றினை எவ்வாறெல்லாம் வருணிப்பீர்கள்? எழுதுங்கள்.
- முதலெழுத்து, இரண்டாவது எழுத்து ஒரே போல் வரும் சொற்களைப் பட்டியலாக எழுதுங்கள்.
- இயற்கை அழகை வருணிக்கும் கவிதைகளைத் தொகுத்து வெளியிடுங்கள்.
- ஓர் இயற்கைக் காட்சியைப் படமாக வரையுங்கள்.

# அழகான நகரம்



மாஸ்கோவில் ஓட்டல் ரஷ்யாவில் பகல் உணவை முடித்துக்கொண்டு, செப்டம்பர் நாலாம் தேதி பிற்பகல் மீண்டும் விமானநிலையத்துக்கு வந்தோம். அங்கிருந்து சோவியத் நாட்டின் தென்பகுதியி ருக்கும் கஸாக்ஸ்தான் குடியரசின் தலைநகரான ஆல்மா ஆட் டாவுக்குப் பறந்தோம், ஆல்மா ஆட்டாவுக்கு எங்கள் விமானம் வந்து சேரும்போது நன்றாக இருட்டி விட்டது.

அப்போது ஆல்மா ஆட்டாவில் நல்ல மழை. எங்களுக்கு ஓட்ட ல் அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. எட்டாவது மாடியி ருந்த 818-ம் எண்ணுள்ள அறை எனக்கு! பெட்டியை அறையில் வைத்துவிட்டு, கீழே சாப்பாட்டுக்கூடத்துக்கு என் இந்திய நண்பர் களோடு வந்தேன்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு அறைக்கு வந்தேன். குளிருக்கு வேண்டிய எல்லாச் சாத னங்களையும் மாட்டிக்கொண்டு படுக்கையில் விழுந்தேன்.

அலுப்புத் தீர உறங்கி எழுந்த போது, காலைப்பொழுது இதமான குளிருடன் விடியத் தொடங்கியிருந் தது. அறைக்குப் பின்புறம் தென் பட்ட திறந்தவெளிக்கு வந்தேன். நான் கண்ட காட்சி கண்கொள்ளாக்

காட்சியாக இருந்தது. இயற்கையின் மடியில் கொஞ்சித் தவழும் ஓர் இன்ப உலகுக்கே வந்துவிட்ட குதூகலம் என்னுள்ளே பொங்கியது. தொலைவில் தெரிந்த மலைச்சிகரத்தின் மீது அப்போதுதான் கதிரொளி கண்ணாமூச்சி காட்டி விளையாடிக்கொண்டிருந்தது. ஸை அட்சதோவ் என்ற அந்த அழகான மலைச்சார ல்தான் நகரமே அமைந்திருந்தது. மலைச்சிகரத்தில் உறைந்திருந்த பனிக்கட்டிகள் காலைவெயி ல் பளபளத்தன. சிகரத்துக்குக் கீழே ஒரு வண்ணம், அதனையடுத்து மற்றொரு வண்ணம், அதற்கும் கீழே பசுங்காடுகள்! இப்படி அந்த மலையே பல்வேறு நிறங்களில் நெய்த போர்வையைப் போர்த்துக்கொண்டிருந்தது.

எட்டாவது மாடியின் விளிம்பில் நின்றுகொண்டிருந்த நான் நகரத்தைச் சுற்றிப்பார்த்தேன். எங்கும் உயர்ந்தோங்கி வளர்ந்த நெடுமரக் கூட்டமாகக் காட்சியளித்ததே தவிர, கட்டடங்களை மிகுதியாகக் காண வில்லை. ஆனால் நான்கு புறங்களிலும் கட்டடங்கள் இருக்கத்தான் செய்தன. என்றாலும் அவையெல்லாம் மரக்கூட்டங்களிடையே அகப்பட்டிருந்தன.

மாஸ்கோவைத் தான் அழகான நகரம் என நினைத்தோம்; இது அதையும் மிஞ்சிவிடும் போ ருக்கிறதே! என நினைத்தேன். நான் நினைத்தது முற்றிலும் சரிதான். என்னுடன் வந்திருந்த மாஸ்கோவாசிகளே அதை ஒப்புக்கொண்டார்கள். அது மட்டுமல்ல, சோவியத் நாட்டிலேயே இயற்கையழகுடன் கூடிய அற்புதமான நகரம் ஆல்மா ஆட்டா என்றார்கள்.



கார்களுக்கான சாலையை ஒட்டி நடைபாதைச் சாலை ஒன்று அமைத்திருந்தார்கள். இந்த நடைபாதையின் இரு மருங்கிலும் வானுற வளர்ந்தோங்கிய நெடுமரங்கள். சாலையை ஒட்டிச் சின்னஞ்சிறு அருவி போல் சலசலத்து ஓடும் ஒரு கால்

வாய். எதிரில் சாலைக்கு அப்பால் பெரியதொரு பூங்கா. அந்தப் பூங்காவிலும் வரிசை வரிசையாக மரங்கள். மரத்தடியில் இளைப்பாறுவதற்காக நீண்ட பெஞ்சுகள்.

தெருக்களில் ஒரு தூசியோ, காகிதத்துணுக்கோ கண்டுபிடிக்க முடியவில்லை. கட்டடங்களின் வாயில்களில் பெரிய பெரிய பூந்தொட்டிகளைப்போல் மண் ஜாடிகள் வைத்திருந்தார்கள். பல நிற வண்ணம் பூசப்பட்ட ஜாடிகள். அவற்றில் செடி கொடிகளைக் காணோம். எதற்காக அவற்றை வைத்திருக்கிறார்கள்? எனக்கு முன்னே சென்ற ஒருவர் அதில் எதையோ வீசி விட்டுச் சென்றதைப் பார்த்து அருகில் போய் எட்டிப் பார்த்தேன். உள்ளே சில காகிதத் துணுக்களும் தீக்குச்சிகளும் கிடந்தன. அப்போதுதான் தெரிந்தது அது ஒரு குப்பைத்தொட்டி என்று!

மாஸ்கோ நகரத்தில் மனிதர்களிடம் காணப்பட்ட இயந்திர வேகத்தையும் பரபரப்பையும் என்னால் ஆல்மா ஆட்டாவாசிகளிடம் காணமுடியவில்லை. மாஸ்கோவாசிகளின் நடை, பாதிஓட்டமும் பாதிநடையுமாகவும் இருக்கும். இவர்களோ, சூழ்ந்திருக்கும் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையைப்போல் நிதானமாக நடந்தார்கள்.

பூங்காக்கள் நிறைந்த நகரமாயிருந்தும் ஆல்மா ஆட்டாவின் பூங்காக்களில் யாரும் பகல் நேரத்தில் படுத்துச் சோம்பல் முறித்ததை நான் காணவில்லை. வயதின் முதிர்ச்சியால் ஓய்வு பெற்றவர்கள் அங்கே வந்து காற்று வாங்கினார்கள். எங்களிடம் பேச விரும்பி எங்களைப் பற்றிப் புரிந்துகொள்ளமுயன்றார்கள்.

நேரம் கிடைத்தபோதெல்லாம் நான் யாரையாவது அழைத்துக்கொண்டு ஊர் சுற்றக் கிளம்பி விடுவேன். சதுரம் சதுரமான தெருக்கள்! அழகழகான கட்டடங்கள். ஆல்மா ஆட்டாவின் புது நகர்ப்பகுதி நாங்கள் இருந்த பகுதி அங்கே பற்பல அடுக்கு மாளிகைகள் இப்போது புதிதாகத் தோன்றியிருந்தன.

பழைய நகரமும் வேறு ஒரு வகையில் அழகாய்த் தானிருந்தது. மேல் மாடிக்குத் தார்சில்லால் ஓடு வேய்ந்திருந்தார்கள். நமது கேரளத்து மாடி வீடுகள் போல் சிலவும் கூரை வீடுகள் போல் வேறு சிலவும் காட்சியின் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டுக் கட்டப்பட்டிருந்தன. பெரும்பாலும் ஒரே அளவுள்ளவையாகத் தோன்றின.

ஆல்மா ஆட்டா நகரத்தில் ஏற்கனவே கிடந்த மரங்கள் போதாதென்று மாநாட்டுக்கு வந்த எழுத்தாளர்களையும் புதிதாக ஒருதோட்ட வெளியில் மரம் நடச் செய்தார்கள். அன்று எங்களால் நூற்றுக்கணக்கான மரங்கள் நடப்பெற்றன. அவை நன்கு பேணி வளர்ச்சிபெறும் என்பதிலும் எங்களுக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

எதையும் புதிதாக உற்பத்தி செய்யாமல், உள்ளவற்றை அழித்துப் பயன் செய்வதில் வல்லவர்கள் நாம். நம் நாட்டில் இந்த இருபதாண்டுக் காலத்தில் வெட்டப்பெற்ற மரங்களின் எண்ணிக்கைக்கு அளவே இராது. ஆனால் நாம் மீண்டும் புது மரங்களை உருவாக்குவதில்லை. புதுக் காடுகள் உற்பத்தி செய்வதில்லை. சோவியத் மக்களோ, இயற்கை தரும் செல்வத்தின் மதிப்பைப் போற்றத் தெரிந்தவர்கள்; அதை வளர்க்கத் தெரிந்தவர்கள். பயன்படுத்துவது ஒரு மடங்கென்றால் உற்பத்தி செய்வது இரு மடங்கு அங்கே! இதை நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

காற்று, தண்ணீர், கதிரொளி, மரம், செடி, கொடி ஒவ்வொன்றின் அருமையையும் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். விஞ்ஞானத்தில் வெகுவேகமாக முன்னேறியும் கூட, இயற்கை தரும் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கிறார்கள். நான் அங்கே ஆல்மா ஆட்டாவில் மரம் நட்டபோது இந்தியாவில் எப்போது மரம் நடுவதற்காக ஒரு பேரியக்கம் இமயம் முதல் குமரி வரை தொடங்கப் போகிறது? என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன்.

**-அகிலன்**

## செயல்பாடுகள்

- இப்பயணக்கட்டுரையில் உங்கள் மனதைக் கவர்ந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுங்கள்.
- ‘மரம் ஒரு வரம்’ இம்முத்திரை வாக்கியம் போன்று இயற்கையைப் பாதுகாப்பதற்கான முத்திரை வாக்கியங்கள் அடங்கிய சுவரொட்டி தயாரியுங்கள்.
- அண்மையில் நீங்கள் சென்ற பயணம் பற்றிய அனுபவத்தை எழுதுங்கள்.
- ‘இமயம் முதல் குமரி வரை’ என்பது போன்ற தொடர்களைக் கூறுங்கள். அவற்றைப் பயன்படுத்தி ஒரு நிகழ்ச்சியை எழுதுங்கள்.

# புதிய காடு

ஒரு காட்டில் விலங்குகள் அனைத்தும் தங்கள் பகையை மறந்து வசித்து வந்தன, எந்த ஒரு விலங்கும், எக்காரணத்தைக் கொண்டும் எப்போதும் மற்றொரு விலங்கின் மீது பகையோ சீற்றமோ கொள்வதில்லை,

அவ்வாறு வசித்த விலங்குகள் ஒரு சமயம், மாநாடு நடத்த வேண்டும் என்று தீர்மானித்தன; தீர்மானித்தபடியே மாநாட்டை நடத்தின, விலங்குகளெல்லாம் அந்த மாநாட்டிற்கு வந்து சேர்ந்தன, பாம்பும் கீரியும், பூனையும் எலியும், பருந்தும் காக்கைக் குஞ்சும், புலியும் மானும் இணைந்து அங்குக் கூடியிருந்தன, பறவையினங்களும் வந்து அமர்ந்திருந்தன, எறும்பு, புழு, பூச்சி இனங்களும் வந்து ஒரு பக்கத்தில் கூடியிருந்தன,

அந்த மாநாட்டுக்கு யானை ஒன்று தலைமை வகித்தது, அந்த யானை ஒரு மேட்டின் மீது உட்கார்ந்திருந்தது, அதற்குச் சிறிது தூரத்தில் புலியும் சிங்கமும் அமர்ந்திருந்தன,



தலைமை வகித்த யானை பிளிறிக்கொண்டே எழுந்தது. அப்போது விலங்குக் கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்த ஒட்டகச்சிவிங்கி, தான் இருந்த இடத்திலிருந்தே தன் தலையை நீட்டி ஒரு மலர்மாலையை யானையின் கழுத்தில் போட்டது,

யானை அதன் பிறகு பேசத் தொடங்கியது "இந்த உலகத்தில் நம்மைப் போன்ற வலிமையுடையவர்கள் யாருமில்லை, அவ்வாறு இருந்தும் மனிதர்கள் நம்மை மதிக்காமல் வேலையாட்களைப்போல் நடத்துகின்றார்கள்; அடித்துத் துன் புறுத்துகின்றார்கள், நாம் எல்லோரும் ஒன்றுபட்டு, இந்த அநியாயத்தை எதிர்க்க வேண்டும்" என்று கூறியது,

யானை அவ்வாறு பேசி முடித்தவுடன், விலங்குகளின் கூட்டத்திலிருந்து 'ஒற்றுமையே வலிமை! ஒன்றுபடுவோம்! உயர்வடைவோம்!' என்னும் ஒலி விண் ணதிர எழுந்து ஒலித்தது,

அதன் பிறகு  சிங்கம் எழுந்து கர்ச்சித்துப் பேசத் தொடங்கியது; "சகோதர சகோதரிகளே! தலைவர் யானையார் கூறியதைக் கேட்டோம். மனித இனத்துக்கு நாம் அடிமைப்படக் கூடாது என்பதை நானும் ஒப்புக்கொள்கின்றேன், அதே சமயத்தில் மற்றொன்றையும் நாம் கவனிக்க வேண்டும், அவர்கள் தங்களது சமு தாய வளர்ச்சிக்காகப் பல பணிகளைச் செய்கின்றார்கள், அவர்களைப்போல் நாமும் செய்ய வேண்டும், நாம் ஒவ்வொருவரும் உண்பதும் உறங்குவதுமாகக் காலத்தைக் கழிக்கக் கூடாது, உங்களால் என்னென்ன செய்ய முடியும் என் பதைச் சொல்லுங்கள்" என்று பேசி முடித்தது,

புலி உடனே "நான் விவசாய வேலைகளைக் கவனித்துக்கொள்ளு கின்றேன்" என்றது, மான் எழுந்து, "நான் அழகுப் பொருள்களைத் தயாரிக்கும் பணியைச் செய்கின்றேன்" என்றது.

பின்னர் காகம், "நான் நேரத்தைச் சரியாக அறிந்து சொல்லுகிறேன்" என்று கூறியது.

எருது எழுந்து, "நான் விவசாய வேலைகளைக் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்றது.

எருமை எழுந்து "நாங்கள் பாலைப் பொழிந்து எல்லோருக்கும் வலிமையூட்டுகிறோம்" என்றது.

அதனை அடுத்து குயில், "நாங்கள் இனிய கானம் இசைத்து உங்களை மகிழ்விக்கின்றோம்" என்றது.

விலங்குகளின் கூட்டத்தில் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த எறும்புகள் "நாங்களும் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்கின்றோம்" என்று ஒரு சேரக் கூறின.

எறும்புகள் அவ்வாறு கூறியதைக் கேட்டதும், விலங்குகளெல்லாம் வாய் விட்டு உரக்கச் சிரித்தன.

எறும்புகள் அதைக் கண்டு, ‘நாம் என்ன தவறாகச் சொல்லிவிட்டோம்’ என்று எண்ணி, ஒன்றும் புரியாமல் தவித்தன.

தலைமை வகித்த யானை, “நீங்கள் மிகவும் சிறியவர்கள். உங்களைப் பார்த்தாலே பாவமாக இருக்கின்றது. உங்களால் என்ன செய்யமுடியும்? நீங்கள் எல்லோரும் பேசாமல் எங்கள் பாதுகாப்பில் இருங்கள். இப்படி அசட்டுத்தனமாக இனிமேல் பேசாதீர்கள்” என்று புத்திமதி கூறியது.

எறும்புகள் அதைக் கேட்டதும் “தலைவர் அவர்களே! நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கின்றது! தங்களுடைய பாதுகாப்பு எங்களுக்கு வேண்டாம் எங்களால் உங்களைக் காப்பாற்ற முடியும்!” எனக் கூறின.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த சிங்கம் சீற்றம்கொண்டு அவ்வெறும்பு களை நோக்கி, “மீண்டும் முட்டாள்தனமாகப் பேசுகிறீர்களே!” என்றது.

எறும்புகள் அதற்கு, “மனிதக் கூட்டம் அதிகமாகிக்கொண்டு வருகின்றது. அவர்களுக்கு இருக்கவே இடம் போதவில்லை. அதனால் அவர்கள் பலவகையில் இனப்படுகொலையைத் தொடங்கியிருக்கின்றார்கள். நாட்டிலும் வீட்டிலும் காட்டிலும் தைரியமாக வாழும் எங்களுக்குத் தான் மனிதர்களின் அசுரத் திட்டம் தெரியும்!” என்று பதில் கூறின.

மாநாட்டுத் தலைவராகிய யானை “நீங்களாவது, மனிதர்களை எதிர்ப் பதாவது? அவர்கள் உங்களைக் காலால் மிதித்துத் தேய்த்து விட்டே போய்விடுவார்கள்” என்று கூறியது.

அதற்கு எறும்புகள் “நீங்களெல்லோரும் எங்கள் உருவத்தைக் கண்டு மிகவும் கேவலமாக, ஏளனமாகப் பேசுகின்றீர்கள்! சிரிக்கின்றீர்கள்! எங்கள் திறமை பற்றி நீங்கள் அறியாமல் பேசுகின்றீர்கள்! ‘எறும்பூரக் கல்லும் தேயும்’ என்று எங்கள் திறமையை அறிந்து மனிதர்கள் கூறினார்கள். உங்களில் யாருடைய திறமையையும் எவரும் போற்றி இவ்வாறு கூறவில்லை. இதிலிருந்தே நீங்கள் எங்கள் திறமையைப் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் செய்வதைப் பொறுத்திருந்து பாருங்கள்! அப்போதாவது நீங்கள் எங்கள் திறமையைப் புரிந்து கொள்வீர்கள்!” என்று சொல்லிவிட்டு, மாநாட்டுக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தன.

அதன் பின்னர் ஓர் ஆண்டு கழிந்தது.

யானையும் சிங்கமும் புலியும் சேர்ந்து, தங்கள் இனத்தவர்கள் செய்திருக்கும் பணிகளைப் பார்வையிடுவதற்காகச் சென்றன.

மான்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த காட்டுப்பகுதியைக் காணவில்லை. கருடனும் பருந்தும் கூடு கட்டி வாழ்ந்த பனை, தென்னை முதலிய மரங்களையும் காணவில்லை.

யானை, சிங்கம், புலி மூன்றும் காட்டுப்பகுதியைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தன. விலங்குகள் செய்த பணிகளை எங்கும் காணவில்லை.

அவை மூன்றும் நடந்த வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அந்த ஆற்றங்கரையில் நூற்றுக்கணக்கில் ஆலங்கன்றுகள் பரவலாக முளைத்து வளர்ந்திருந்தன. அவை மூன்றும் அக்கன்றுகளைக் கண்டவுடன், ‘இவ்வளவு ஆலமரக் கன்றுகளை யார் வளர்த்து வருகின்றார்கள்?’ என்று யோசித்தன. அக்கன்றுகளின் அருகில் எறும்புக்கூட்டமும் இருந்தது.

எறும்புக்கூட்டத்தைக் கண்டவுடன் யானை ஆவலுடன் அவற்றின் அருகில் சென்று, “எறும்புகளே! இவ்வளவு ஆலமரங்களை யார் நட்டார்கள்?” என்று கேட்டது.

எறும்புகள் அதைக் கேட்டதும் பெருமிதத்துடன் “நாங்கள் தான் நட்டோம், நாங்கள் ஒவ்வொரு ஆலம் விதையாக இழுத்து வந்து புதைத்தோம். அவ்விதைகள் முளைத்துக் கன்றுகளாக வளர்ந்து விட்டன. இன்னும் சில ஆண்டுகளில் இவை மரங்களாகிப் பெரிய காடாகி விடும். நாம் எல்லோரும் மனிதப் பயமின்றி அக்காட்டில் வாழலாம்” என்று கூறின.

யானையின் அருகில் நின்ற சிங்கம் அதைக் கேட்டதும், “அப்படியா? மகிழ்ச்சி! எறும்புகளே! மனிதர்கள் ஏதோ திட்டம் தீட்டுகிறார்கள் என்று முன்பு கூறினீர்களே! என்ன திட்டம் அது?” என்று கேட்டது.

எறும்புகள் அதற்கு, “காட்டை அழிப்பதுதான் மனிதர்களின் திட்டம். அத்திட்டத்தின்படி தான் அவர்கள் காட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகிறார்கள். அவர்கள் காட்டை அழித்துவிட்டால் நாம் எப்படி வாழ முடியும்? மேலும் காட்டை அழித்து விட்டால் எப்படி மழை பெய்யும்? அவர்கள் கிணறு தோண்டிச் சமாளித்துக் கொள்வார்கள். நாம் என்ன செய்யமுடியும்? இவற்றையெல்லாம் யோசித்துத் தான் நாங்கள் புதிய காட்டை உருவாக்குகிறோம்.

இன்னும் சிறிது காலத்தில், ஆலமரங்கள் வளர்ந்து பெரிய காடாகி விடும். இதில் ஐயமில்லை!" என்று விளக்கமாகப் பதில் கூறின.

அதைக் கேட்ட யானை மிகவும் வியப்படைந்து, "ஆகா! எறும்புகளே! நீங்கள்தான் உண்மையிலேயே புத்திசாலிகள்! உருவிலே சிறியவர்களாக நீங்கள் இருந்தாலும் அறிவிலே பெரியவர்களாக இருக்கின்றீர்கள்! உருவம் பெரியதாக இருந்து என்ன பயன்? அறிவு பெரியதாக, வலிமையுடயதாக இருக்க வேண்டும்? உண்மையிலேயே நீங்களே நம் இனத்துக்குத் தலைவர்கள்! வாருங்கள்! எல்லோரும் என் முதுகின்மேல் ஏறிக்கொள்ளுங்கள்! காட்டில் பவனி வருவோம்!" என்று சொல்லி மண்டியிட்டு உட்கார்ந்தது.

எறும்புகள் மகிழ்வுடன் "இப்போது எங்கள் திறமையைப் புரிந்து கொண்டதற்கு மிகவும் நன்றி!'' என்று சொல்லி யானையின் முதுகில் ஏறி அமர்ந்து காட்டில் பவனி வந்தன.

## செயல்பாடுகள்

- மான்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த காட்டுப்பகுதியைக் காணவில்லை, என்ன நிகழ்ந்திருக்கும்? எழுதுங்கள்.
- கதையில் மிருகங்கள் பேசுவதைச் சிறு சிறு உரையாடல் வடிவில் எழுதுங்கள்.
- எது, யார், எங்கு, எப்போது, ஏன் போன்ற வினாச்சொற்கள் இடம்பெறும் வினாக்களைப் பாடப்பகுதியி ருந்து தயாரியுங்கள், வினாப்போர் நடத்துங்கள்.
- எறும்பைப் போன்று பிற விலங்குகள் காட்டை அழிவி ருந்து காக்க என்னென்ன செய்திருக்கும். கற்பனை செய்து எழுதுங்கள்.
- கீழ்க்காணும் கூற்றுகளில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.
  - "எரும்புகளே! இவ்வலவு ஆலமறங்களை யார் நட்டார்கள்?"
  - "நீங்கல் அரிவில் பெறியவர்கள்."
  - "காட்டிள் பவனி வறுவோம்."

# ஒரு மரத்தின் வேதனை

எப்படியோ வழியைத் தவற விட்டுவிட்டு அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் சிக்கிக்கொண்டான் சரவணன், திடீரெனப் பெருங்காற்று வீசியது, காற்றின் வேகத்தில் பெரிய பெரிய மரங்கள் ஒன்றோடொன்று உரசிப் பயங்கர ஓசையை எழுப்பின, இடியும் மின்னலுமாய் மழை வேறு அவனை அச்சுறுத்தியது,



சரவணன் உடம்பு முழுவதும் தெப்பமாய் வியர்த்துக் கொட்டியது, திரும்பிய பக்கமெல்லாம் அரக்கர் கூட்டம் போல் ஓங்கி உயர்ந்த மரங்கள் வழிமறைத்து நின்றன!

“கடவுளே! இந்தக் காட்டுப்பகுதியி ருந்து எப்படித் தப்பிப்பது?” அந்த நேரத்தில் யாரோ மிக அருகில் அவனை அழைக்கும் குரல் கேட்டது.

“யாரது?” திடுக்கிட்டுத் திரும்பினான், நாலா பக்கமும் கண்களைச் சுழல விட்டான், ஒருவரையும் காணோம்,

“யார் என்னைக் கூப்பிட்டது? ஐயய்யோ! எனக்குப் பயமாயிருக்கே!’ கதறினான் சரவணன்,

“பயப்படாதே தம்பி !” மீண்டும் அந்தக் குரல்,

“யார் நீ? எங்கேயிருந்து பேசறே?”

“நான்தான்,,,, நானேதான்! உன் எதிரேயிருக்கின்ற மரம் பேசுகிறேன்,”

“என்னது? மரமா பேசுது!” வியந்து நின்றான்,

“வியப்படைய வேண்டாம், மரம்தான் பேசுகிறேன், ஆ! வ ,,, உடம்பெல்லாம் விண்விண்ணென்று தெறிக்கிறதே! என்னால் சத்தமாகக் கூடப் பேச முடியவில்லையே,,,!,” என மரம் வேதனைப்பட்டது,

“உடம்பு வ க்கிறதா? உனக்குக் கூட வ க்குமா?”

“நீ படிக்கின்ற மாணவன்தானே! எங்களுக்கு உயிர் இருக்கிறதென்று தெரியாதா? ஆ,,,! அம்மா,,,! என் நடு உடம்பெல்லாம் குத்து,,,, வெட்டு,,,, ரணமாகி வேதனை தருகிறதே! ஐயோ,,, அம்மா!” அந்த மரம் அலறித் துடித்தது.

“ஹா,,, இது என்ன கொடுமை! உன் உடம்பெல்லாம் தோலுரிந்து காணப்படுகிறதே” சரவணன் அதிர்ச்சியுடன் கேட்டான்,

“எல்லாம் உங்கள் மனித ஜாதி செய்யும் கொடுமைதான்!” மரம் கண்ணீர் வடித்தது,

“உன்னைப் பார்த்தால் எனக்கே பரிதாபமாக இருக்கு. நான் உனக்கு ஏதாவது வைத்தியம் பார்க்கட்டுமா?” சரவணன் கேட்டான்,

“மனித ஜாதியைச் சேர்ந்த நீயா எனக்கு வைத்தியம் பார்க்கப் போகிறாய்? என்னை மேலும் சித்திரவதை செய்யாமல் இருந்தால் அதுவே போதும், தம்பி! இப்போ நான் உன் உடம்புல இருக்கின்ற தோலை உரிக்கட்டுமா ?” மரம் கேட்டது,

“ஐய்யய்யோ,,,,! வேண்டாம்,,,, வேண்டாம்!” சரவணன் ஓட முற்பட்டான்,

“ஓடாதே,,,! நில்! உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்”.

“தம்பி,,,! வேர்கள் தான் எங்கள் உயிர் நாடி, உடம்புதான் நடு மரம், கிளைகள் தான் எங்கள் கைகள், பசுமையான இலைகள்தான் தலைமுடி, உன் தலைமுடியைப் பிடிச்சுக் குலுக்கட்டுமா?”

“தனக்கு வந்தால்தான் தலை வ யும்: காய்ச்சலும் தெரியும் என்று உங்கள் மனித ஜாதியில் அடிக்கடிச் சொல் க்கொள்வார்கள், பிறந்ததிலேயிருந்து சாகிற வரைக்கும்,,, செத்த பிறகும் கூட உங்களுக்குப் பயன்படுகிறோம், அப்படியிருந்தும் எங்களை நல்ல வா பப் பருவமாயிருக்கும்போதோ,,,, குழந்தையாய் இருக்கும்போதோ கூட வெட்டிக் கொலை பண்றீங்களே! இது நியாயமா?”

“ஒ,,, மரமே! நான் எதிர்கால இந்தியாவை உருவாக்கும் மாணவன் உறுதி யாகச் சொல்கிறேன், இந்த நாட்டில் இனி யாரேனும் உங்களுக்குத் தீங்கு செய் தால் அவர்களுக்குத் தக்க தண்டனை அளிக்கச் சட்டமே இயற்றுவேன், இது உறுதி,”

“நன்றி தம்பி,,, நீயாவது என் வேதனையைப் புரிந்துகொண்டாயே! ஆ,,,! அதோ இன்று காலையில் என் உடம்பைக் குத்தி எடுத்த கொலைகாரன்! பிடி,,! முத ல் அவனைப் பிடி!” மரம் பெருங்கூச்ச ட்டது,

“ஆ! அது எங்கள் வீட்டு வேலைக்காரன் மாரியப்பன், மாரியப்பா நில்!” “சரவணா! சரவணா! ஏதாவது கனவு கினவு கண்டியா? மாரியப்பன்.

மரம், அப்படி இப்படியென்று சம்பந்தமில்லாமல் உளர்றே?” கனவு கண்டு உளறிய தன் மகனைத் தட்டி எழுப்பினாள் அவன் அம்மா கற்பகம்,

“அம்மா,,, நம்ம தோட்டத்து மரத்தை வெட்ட வேண்டாம்மா! அது பாவம்” சரவணன் சொன்னான்,

“என்னடா! தூக்கக் கலக்கத்துல உளர்றே” என அவன் அப்பா எரிச்சலடைந் தார்,

“அப்பா ! நான் கண்டது கனவுதான், ஆனாலும் அதுல நிறைய உண்மையி ருக்கு, தயவு செய்து நம்ம தோட்டத்து மரத்தை வெட்ட வேண்டாம், அம்மா,,,,! நீங்களே அப்பாகிட்டே சொல்லுங்க,”

“சரி சரவணா! ஒரு மரத்தையும் வெட்டலே, நீ பேசாமத் தூங்கு;”

அம்மாவின் வார்த்தைகள் அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தன, மனநிறை வோடு மீண்டும் உறங்கத் தொடங்கினான்,

## செயல்பாடுகள்

- எறும்புகள் காடுவளர்த்ததுபோல் காடுகளை வளர்க்க என்னென்ன செய்ய முடியும்? எழுதுங்கள்.
- “இயற்கையைப் பாதுகாப்பது நமது கடமை” எனும் தலைப்பில் உரையாற்ற சொற்பொழிவுக் குறிப்பு எழுதுங்கள்.